# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 19, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் தென் மாநில முதல்வர்கள் மாநாடு, சென்னை அருகே கோவளத்தில் வியாழக்கிழமை (ஆக.20) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
   i. கோவளத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நடைபெறும் இந்த மாநாட்டில் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தெலங்கானா ஆகிய மாநிலங்களின் முதல்வர்களுடன், புதுச்சேரி யூனியன் பிரதே சத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்று தென் மாநிலங்களின் முக்கிய பிரச்னைகள் குறித்து விவாதிக்கவுள்ளனர்.
   ii. தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய், ஆந்திர முதல்வர் என்.சந்தி ரபாபு நாயுடு, கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார், கேரள முதல்வர் வி.டி.சதீசன், தெலங்கானா முதல்வர் ஏ.ரேவந்த் ரெட்டி ஆகியோர் பங்கேற்பார்கள் எனத் தெரிகிறது.
   iii. இந்த மாநாட்டில், மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீடு, எல்லைப் பிரச்னைகள், சட்டம்-ஒழுங்கு சார்ந்த சவால்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளன. குறிப்பாக, தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டால் தென் மாநிலங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையக்கூடும் என்ற கவலை எழுந்துள்ள பின்னணியில் இந்தக் கூட்டம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

2. உடல் பருமன் பாதிப்பால் தமிழகத்தில் 44.2 சதவீத பெண்களும், 38.8 சதவீத ஆண்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது. வாழ்க்கை முறை மாற்றங்களால் இந்த பாதிப்பு விகிதம் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவித்துள்ளது.
   i. உலகளாவிய ஆய்வின்படி, தமிழகத்தில் நிகழும் மொத்த இறப்புகளில் 75 சதவீத உயிரிழப்புகளுக்கு தொற்றா நோய்களே காரணமாக உள்ளன. குறிப்பாக, இதய நோய்கள், புற்றுநோய்,' சர்க்கரை நோய், சிறுநீரக பாதிப்புகள், சுவாச நோய்களுக்குள்ளா வோரின் எண்ணிக்கை பல மடங்கு

அதிகரித்துள்ளது.

ii. சீரற்ற உணவுப் பழக்கம், உடற் பயிற்சியின்மை, உடல் உழைப்பின்மை, துரித உணவுகள் உள்ளிட்டவை உடல் பருமனுக்கு வித்திடுகிறது. அதன் தொடர்ச்சியாக தொற்றா நோய்கள் உருவாகின்றன.

iii. இந்த நிலையில், தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின்படி அதிக எடை, உடல் பருமானால், 44.2 சதவீத பெண்களும், 38.8 சதவீத ஆண்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழக மக்கள் நல்வாழ்வு துறை தெரிவித்துள்ளது. இது குறித்து துறை அதிகாரிகள் கூறியதாவது:

- தமிழகத்தில் உயர் ரத்த அழுத்த பாதிப்புகள் 29.4 சதவீதமாகவும், சர்க்கரை நோய், 19.5 சதவீதமாகவும் உள்ளது. பெரும்பாலான மக்களுக்கு சீரான வாழ்க்கை முறை இல்லை. துரித உணவு, புகையிலை பயன்பாடு, மதுபழக்கம் ஆகியவை தொற்றா நோய்க்கு முக்கிய காரணங்களாக உள்ளன. இந்த நிலை நீடித்தால், பத்தாண்டுகளில் தொற்றா நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும். மேலும் தொற்றா நோயால் ஏற்படும் இறப்பு விகிதம் 80 சதவீதத்தைத் தாண்டும் என அவர்கள் கூறினர்.

3. பல்லாயிரக் கணக்கான குர்து கிளர்ச்சியாளர்களுக்கு நிபந்தனையுடன் கூடிய பொது மன்னிப்பு வழங்கும் சட்டத்துக்கு துருக்கி அதிபர் தயீப் எர்டோகன் ஒப்புதல் அளித்தார்.

i. எனினும், குர்து கிளர்ச்சியாளர்கள் தங்களின் அமைப்புகளை முழுமையாகக் கலைத்துவிட்டு, ஆயுதங்களை ஒப்படைத்து விட்டனர் என்பதை துருக்கியின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் உறுதி செய்த பின்னரே இச்சட்டம் அமலுக்கு வரும்.

ii. கடந்த வாரம் துருக்கி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்தின்படி, கிளர்ச்சியாளர்கள் சிலரின் சிறைத் தண்டனைகள் நிறுத்திவைக்கப்படும். மேலும், குற்றத்தின் தீவிரத்தைப் பொருத்து மற்றவர்கள் மீதான நிலுவையில் உள்ள விசாரணைகள், வழக்குகள் 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படும்.

4. தென்னாப்பிரிக்க நாடான ஜாம்பியாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் ஹகைந்தே ஹிச்சிலேமா 61.4 சதவீத வாக்குகளைப்

பெற்று மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

i. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான பிரைன் முந்துபிலே 38 சதவீத வாக்குகளுடன் 2-ஆம் இடத்தைப் பிடித்தார்.

ii. தேர்தல் அதிகாரிகள் மீதான தாக்குதல், வாக்குச் சீட்டுகள் திருடப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை நிறுத்தப்பட்டு, பலத்த பாதுகாப்புக்கு இடையே மீண்டும் தொடங்கியது.

iii. மேலும், நாட்டின் அமைதியை அச்சுறுத்தியதாக தேர்தலன்று இரவு பல முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

5. தடகள வீரர் தேஜஸ்வின் சங்கர், செஸ் வீராங்கனை திவ்யா - தேஷ்முக் உள்பட 17 பேருக்கு 2025-ஆம் ஆண்டுக்கான அர்ஜுனா விருதை மத்திய விளையாட்டு அமைச்சகம் அறிவித்தது.

i. அத்துடன், பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருதும் அறிவிக்கப்பட்டிருக்க, விளையாட்டுத் துறையில் உயரியதாக இருக்கும் 'தியான் சந்த் கேல் ரத்னா விருது' அறிவிக்கப்படவில்லை.

- **அர்ஜுனா விருது:**
  தேஜஸ்வின் சங்கர், முகமது அஜ்மல், பிரியங்கா கோஸ்வாமி (தடகளம்), ராஜ்குமார் பால், லால்ரெம்சியாமி (ஹாக்கி), சுர்ஜீத், பூஜா (கபடி), திவ்யா தேஷ்முக், விதித் குஜராத்தி (செஸ்), டிரீசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் (பாட்மின்டன்), நரேந்தர் பர்வால் (குத்துச்சண்டை), தனுஷ் ஸ்ரீகாந்த் (செவித்திறன் மாற்றுத்திறனாளி துப்பாக்கி சுடுதல்), ருத்ரான்ஷ் கந்தெல்வால் (பாரா துப்பாக்கி சுடுதல்), ஏக்தா அபியான் (பாரா தடகளம்), அரவிந்த் சிங் (ரோயிங்), அகில் சோரன் (துப்பாக்கி சுடுதல்).
- அர்ஜுனா விருது (வாழ்நாள் சாதனையாளர்): ஐ.அருமைநாயகம் (கால்பந்து)
- துரோணாச்சார்யா விருது: பர்வீர் சிங் (தடகளம்), சோட் லால் யாதவ் (குத்துச்சண்டை), நேஹா சவான் (துப்பாக்கி சுடுதல்)
- துரோணாச்சார்யா விருது (வாழ்நாள் சாதனையாளர்): தர்மேந்திர யாதவ் (குத்துச்சண்டை), வீரேந்தர் குமார் (மல்யுத்தம்)

6. கரோனா காலகட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடியால் நிறுவப்பட்ட 'பிஎம்கேர்ஸ்' நிதிக்கு கடந்த 2024- 25-ஆம் நிதியாண்டில் உள்நாட்டு

நன்கொடையாக ரூ.479 கோடி கிடைக்கப் பெற்றுள்ளது.

i. முந்தைய நிதியாண்டை ஒப்பிடுகையில் இது 30 சதவீத சரிவாகும். இதேபோல், பிஎம் கேர்ஸ் நிதிக்கான வெளிநாட்டு நன்கொடையும் சரிவை சந்தித்துள்ளது.

ii. கடந்த 2020-இல் கரோனா பெருந்தொற்று பரவல் காலகட்டத்தில், அவசரகால நிலையை எதிர்கொள்ளவும், பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலும் பிஎம்கேர்ஸ் (அவசர காலங்களில் குடிமக்களுக்கான பிரதமரின் உதவி மற்றும் நிவாரணம்) என்ற நிதியை பிரதமர் மோடி நிறுவினார்.

iii. பிரதமரை தலைவராகக் கொண்ட இந்த நிதிக்கு எவ்வித பட்ஜெட் ஒதுக்கீடும் கிடையாது. முழுவதும் நன்கொடைகளை மட்டுமே உள்ளடக்கியதாகும்.

iv. இந்நிலையில், மத்திய அரசு வெளியிட்ட தணிக்கை அறிக்கையின்படி, கடந்த 2025, மார்ச் 31-ஆம் தேதிவரை பிஎம் கேர்ஸ் நிதியில் மொத்த இருப்பு ரூ.8,452 கோடியாகும். இதில் 7,846 கோடி நிரந்தர வைப்புத் தொகையாகவும், ரூ.605 கோடி சேமிப்பு வங்கிக் கணக்குகளிலும் இருந்தன.

v. கடந்த 2024-25-ஆம் நிதியாண்டில் இந்த நிதிக்கு கிடைக்கப் பெற்ற உள்நாட்டு நன்கொடை ரூ.479 கோடியாகும். முந்தைய நிதியாண்டில் (2023-24) ரூ.681.8 கோடி உள்நாட்டு நன்கொடை கிடைக்கப் பெற்ற நிலையில், அது 30 சதவீதம் சரிவடைந்துள்ளது.

vi. இதேபோல், வெளிநாட்டு நன்கொடையும் ரூ.1.13 கோடியில் இருந்து ரூ.92.8 லட்சமாகக் குறைந்துள்ளது; இது 18 சதவீத சரிவாகும்.

vii. இந்த நிதியில், கடந்த 2023-24- ஆம் ஆண்டில் குழந்தைகள் நலத் திட்டத்துக்காக ரூ.15.37 கோடி செலவிடப்பட்ட நிலையில், 2024-25-இல் ரூ.87.8 லட்சம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

viii. பிஎம்கேர்ஸ் நிதிக்கு 2020–21– இல் அதிகபட்சமாக ரூ.7,184 கோடி உள்நாட்டு நன்கொடையும், ரூ.495 கோடி வெளிநாட்டு நன்கொடையும் கிடைக்கப் பெற்றது. பின்னர் இது 2021-22-இல் ரூ.1,896 கோடி, 2022-23-இல் ரூ.909 கோடியாக தொடர்ந்து குறைந்தது.

ix. இதேபோல், வெளிநாட்டு நன்கொடையும் ரூ.2021-22-இல் ரூ.40 கோடி, 2022-23-இல் ரூ.2.57 கோடியாக சரிந்தது.

7. இந்தியாவில் ஊழல் தடுப்பு அமைப்புகளின் வரலாற்று மற்றும் உண்மைசார் கண்ணோட்டம் மற்றும் அவை குறித்த பொதுமக்களுக்கான விழிப்புணர்வின்

அவசரத் தேவை.

(i) வரலாற்றுப் பின்னணி மற்றும் உலகளாவிய சூழல்

- குடிமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான ஒரு சுதந்திரமான அமைப்பின் கருத்துருவானது, 1809-ல் ஸ்வீடன் நாட்டில் "ஓம்பட்ஸ்மேன்" (Ombudsman) என்ற பெயரில் உருவானது.
- இந்தியாவில், ஊழல் புகார்களை விசாரிப்பதற்காக மத்திய அளவில் "லோக் பால்" (Lokpal) மற்றும் மாநில அளவில் "லோக் ஆயுக்தா" (Lok Ayukta) ஆகியவற்றை நிறுவ முதல் நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் (1966) பரிந்துரைத்தது.

(ii) சட்டமாக்கலுக்கான நீண்ட பயணம் (1968–2013)

- லோக் பால் மசோதா முதன்முதலில் 1968-ல் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது மக்களவையில் நிறைவேற்றப்பட்டாலும், மாநிலங்களவையில் காலாவதியானது.
- இம்மசோதாவின் அடுத்தடுத்த வடிவங்கள் 1971, 1977, 1985, 1989, 1996, 1998, 2001, 2005 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன; ஆனால் பல்வேறு அரசியல் மற்றும் நாடாளுமன்ற மாற்றங்கள் காரணமாக எதுவும் சட்டமாகவில்லை.
- மத்திய அரசு இதில் தாமதம் காட்டிய நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் 1971-ல் தனது சொந்த லோக் ஆயுக்தா சட்டத்தை நிறைவேற்றிய முதல் மாநிலமாகத் திகழ்ந்தது; அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான், பீகார் மற்றும் கர்நாடகா போன்ற பல மாநிலங்களும் இச்சட்டத்தை இயற்றின.
- இந்தியா 2005-ல் ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் தடுப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டது மற்றும் 2011-ல் அதனை ஏற்று உறுதிப்படுத்தியது.
- ஏறக்குறைய அரை நூற்றாண்டு கால முயற்சிக்குப் பிறகு, லோக் பால் மற்றும் லோக் ஆயுக்தாக்கள் சட்டம் இறுதியாக 2013-ல் நிறைவேற்றப்பட்டது.

(iii) தமிழ்நாட்டில் நிறுவன அமைப்பு மற்றும் நிலை

- லோக் பாலின் தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதிக்கு இணையான அந்தஸ்தையும், அதன் உறுப்பினர்கள் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையான அந்தஸ்தையும் கொண்டுள்ளனர்.
- 2013-ஆம் ஆண்டு சட்டத்தைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் லோக் ஆயுக்தா சட்டம் 2018-ல் நிறைவேற்றப்பட்டது; இவ்வமைப்பு 2019-ல் செயல்படத்

தொடங்கியது.

- தமிழ்நாட்டில், இதன் தலைவர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு இணையானவராகவும், உறுப்பினர்கள் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையானவர்களாகவும் உள்ளனர்.
- தற்போது, இந்தியா முழுவதும் லோக் பால் மற்றும் 28 மாநில லோக் ஆயுக்தாக்கள் செயல்பாட்டில் உள்ளன. (iv) புள்ளிவிவரங்கள் மற்றும் தற்போதைய செயல்பாடுகள் (2025–26)
- மத்திய மற்றும் மாநில அரசுகள் இத்தகைய அமைப்புகளின் உள்கட்டமைப்பு, அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்காக ஆண்டுதோறும் பல நூறு கோடிகளைச் செலவிடுகின்றன.
- அதிக செலவு இருந்தபோதிலும், பதிவு செய்யப்படும் புகார்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. ஏப்ரல் 1, 2025 முதல் மார்ச் 31, 2026 வரை, லோக்பால் 431 ஊழல் புகார்களை மட்டுமே பதிவு செய்தது.
- இவற்றில், 2 புகார்கள் பிரதமருக்கு எதிராகவும், 2 மத்திய அமைச்சர்களுக்கு எதிராகவும், 6 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் இருந்தன.
- 2013-க்குப் பிறகு லோக் ஆயுக்தாக்களை நிறுவிய மாநிலங்களில், பழைய அமைப்புகளைக் கொண்ட மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் பொதுவாகக் குறைவான எண்ணிக்கையிலான புகார்களே பதிவாகின்றன.

(iv) அதிகாரங்கள் மற்றும் தாமாக முன்வந்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் (Suo Motu Authority) குறித்த ஒப்பீடு

- 2013-க்கு முன் நிறுவப்பட்ட லோக் ஆயுக்தாக்கள் (எ.கா., கர்நாடகாவில் உள்ளவை), பின்னர் உருவாக்கப்பட்டவற்றை விட பெரும்பாலும் வலுவான விசாரணை அதிகாரங்களைக் கொண்டுள்ளன.
- தாமாக முன்வந்து (suo motu) வழக்குகளை எடுத்துக்கொள்வதற்கும் பொது விழிப்புணர்வு ஆய்வுகளை நடத்துவதற்கும் தெளிவான சட்டப்பூர்வ அதிகாரங்களைக் கொண்ட மனித உரிமைகள் அல்லது குழந்தைகள் உரிமைகள் ஆணையங்களைப் போலன்றி, லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டங்கள் இத்தகைய அதிகாரங்களை அவ்வளவு தெளிவாக வரையறுக்கவில்லை.
- விசாரணைகளைத் தொடங்குவதற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் இத்தகைய அமைப்புகளுக்குத் தெளிவான அதிகாரத்தை வழங்கும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்டங்களில் திருத்தம்

செய்ய வேண்டும்.

(v) பொது விழிப்புணர்வின் அவசரத் தேவை

- உயர்மட்ட ஊழல் தடுப்பு அமைப்புகள் குறித்து மக்களிடையே குறிப்பிடத்தக்க விழிப்புணர்வு இல்லாததால், இந்தத் பாதுகாப்பு உள்கட்டமைப்பை மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை.
- ஊழலை ஒழிப்பது என்பது அரசின் கடமை மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனின் ஜனநாயகப் பொறுப்பும் ஆகும்.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஊழல் தடுப்புச் சட்டங்கள் மற்றும் அமைப்புகள் குறித்த முறையான கல்வி வழங்கப்பட வேண்டும்.
- இந்த அமைப்புகளை எவ்வாறு அணுகுவது மற்றும் அவற்றின் அதிகார வரம்புகள் என்ன என்பது குறித்து மக்களுக்குக் கற்பிக்க, லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா அலுவலகங்களுக்குள் ஒரு சிறப்பு "விழிப்புணர்வுப் பிரிவு" (Awareness Wing) நிறுவப்பட வேண்டும்.